ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

# ஆர்யதர்மம்.

आदौ विजित्य विषयान्मदमोहरागद्वेषादिशत्रुगणमाहृतयोगराज्याः ।
ज्ञात्वा मतं समनुभूय परात्मविद्या कान्तासुखं वनगृहे विचरन्ति धन्याः ॥

𑌆𑌦𑍌 𑌵𑌿𑌜𑌿𑌤𑍍𑌯 𑌵𑌿𑌷𑌯𑌾𑌨𑍍𑌮𑌦𑌮𑍋𑌹𑌰𑌾𑌗𑌦𑍍𑌵𑍇𑌷𑌾𑌦𑌿𑌶𑌤𑍍𑌰𑍁𑌗𑌣𑌮𑌾𑌹𑍃𑌤𑌯𑍋𑌗𑌰𑌾𑌜𑍍𑌯𑌾𑌃 । 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌮𑌤𑌂 𑌸𑌮𑌨𑍁𑌭𑍂𑌯 𑌪𑌰𑌾𑌤𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌕𑌾𑌨𑍍𑌤𑌾𑌸𑍁𑌖𑌂 𑌵𑌨𑌗𑍃𑌹𑍇 𑌵𑌿𑌚𑌰𑌨𑍍𑌤𑌿 𑌧𑌨𑍍𑌯𑌾𑌃 ॥

धन्याष्टकम् । 𑌧𑌨𑍍𑌯𑌾𑌷𑍍𑌟𑌕𑌮𑍍 ।

அடிக்கடி ஜநந மரண துக்கத்திற்குக் காரணமாயிருக்கும் இந்த ஸம்ஸாரத்தை முற்றிலும் விலக்கி அழிவில்லாத ஆனந்தத்தைப் பெறவேண்டுமென்கிற அவாகொண்ட அறிஞர்கள் முந்தி விஷயங்களிலுள்ள தோஷங்களை நன்குற்று நோக்கி நிலையற்றவை என்று அறிந்து அவைகளிலுள்ள பற்றுதலை அறவேயொழித்து விஷயங்களைப் பூராவும் ஜயித்து விடுகிறார்கள். பிறகு விஷயங்களிலுள்ள விருப்பத்தாலேற்படும் காமம் குரோதம் முதலான சத்ருக்களுக்கு இவர்களிடம் இருக்க்முடியாமல் தாமாகவே விலகும்படி நேருன்கிறது, ஸகல துக்கங்களுக்கும் முக்கிய காரணங்களான காமாதிகளை வெகு சுலபமாய் ஜயித்து விடுகிறார்கள். அதற்குப் பிறகு அஷ்டாங்கயோகமென்னும் ராஜ்யத்தையடைந்து அதில் இரக்ஷிக்க வேண்டி மதம் இன்னதென்பதை நன்கு அறிந்து அரண்யமென்கிற வீட்டையடைந்து பரமாத்மவித்யை என்கிற ஸ்திரீயோடு குறைவில்லாத நித்யஸுகத்தை அநுபவித்துக் கொண்டு பாக்கியசாலிகளாகிறார்கள்.

இதினால் விஷயபோகங்களிலுள்ள ஆசையை முற்றிலும் போக்கி மதமோஹாதிகளான வைரிகளையும் ஓடும்படி செய்து யோகமென்றும் ராஜ்யத்தில் வநமென்கிற அரண்மனையையடைந்து ஆத்மவித்தை என்கிற வதூவுடன்கூட சுகித்திருப்பதே இப்பிறவிக்குற்ற பயன். ஆகையால் அதையடைய எல்லாரும் எத்தனிக்க வேண்டியது அவச்யமென்று அறிவிக்கப்படுகின்றது.

சுபம். உபபத்திராதிபர்,

280



# ஆத்மாநாத்ம விவேகம்.

(உஉஅ-வது பக்கத்தொடர்ச்சி)

சிஷ்—உபக்ரமமென்றால் என்ன.

குரு—ஒரு விஷயத்தை அறிவிக்க முன் வரும் பிரகாணத்தின் ஆரம்பம் என்று பொருள.

சிஷ்—உபஸம்ஹாரமென்றால் என்ன.

குரு—அந்தப்பிரகரணத்தின் முடிவென்று பொருள். ஒரு விஷயத்தில் நமக்குச் சங்கை நிகழுமானால் அதை நிரூபிக்கும். பிரகரணத்தின் மத்தியில் வேறு சில விஷயங்கள் விசாரம் செய்யப்பட்டிருந்தாலும் துவக்கத்திலும் முடிவிலும் எதை நிரூபிக்கின்றதோ அந்த வஸ்துவே அந்தப்பிரகாணத்தால் போதிக்கப் படுகின்றதென்று தீர்மானித்துக்கொள்ள வேண்டும். இவ்விதமே சாந்தோக்ய உபநிடதம் ஆறாவது அத்தியாயத்திலுள்ள பிரகரணத்தில் சொல்லப்பட்ட இரண்டற்ற பரமாத்மவஸ்துவையே முடிவிலும் கூறப்பட்டிருக்கிறது.

சிஷ்—அப்யாஸம் என்றால் எது.

குரு—ஒரு பிரகரணத்தால் போதிக்கப்படும் ஒரு வஸ்துவை அதே பிரகரணத்தில் அடிக்கடி நிரூபிப்பதே அப்பியாஸமென்று சொல்லப்படுகிறைது. இதுவும் முற்கூறிய சாந்தோக்யத்தில் முந்தி அத்விதீயாத்மவஸ்துவை போதித்துப் பிறகும் அதையே ஒன்பது தடவை கூறப்பட்டிருக்கின்றது.

இவ்விதம் கூறுவதற்குத்தான் அப்பியாஸமென்று பெயர்.

சிஷ்—பலம் என்றால் என்ன.

குரு—பிரகரணத்தில் கூறப்பட்ட அத்வைதாத்மஞானத்திற்கோ அதின் அநுஷ்டானத்திற்கோ அந்தப்பிரகரணத்தில் சொல்லப்

படும் பிரயோஜனம் பலமாகும். இதுவும் சாந்தோக்யத்திலே யே "ஆசார்யவான் புருஷோவேத" என்பதாதி வசனங்களால் நன்கு வெளியிடப்பட்டிருக்கின்றது.

சிஷ்—அபூர்வதா என்பது என்ன.

குரு—பிரகாணத்தால் நிரூபிக்கப்பட்ட அத்விதீயாத்மவஸ்துவானது வேறு பிரமாணங்களுக்கு விஷயமாகாமலிருப்பதே அபூர்வதையாகும். இதுவும் சாந்தோக்யத்தில் பிரஸித்தம்.

சிஷ்—அர்த்தவாதம் என்றால் என்ன.

குரு—பிரகாணத்தில் சொல்லப்பட்ட வஸ்துவை உத்தேசித்து ஆங்காங்கு ஸ்துதிப்பது அர்த்தவாதம். இதுவும் அந்தப் பிரகாணத்திலேயே. எதையறிந்தால் ஸகல வஸ்துக்களுடைய சிரவணமும் ஸகலேஷ்டஸித்தியும் ஸகல ஞானஸித்தியுமேற்படுமோ அந்த வஸ்துவையா நீ அறியவேண்டுமென்று பிரச்னம் செய்கிறாய் என்று ஆத்ம வஸ்து ஸ்துதியால் காண்பிக்கப்பட்டிருக்கின்றது.

சிஷ்—உபபத்தி என்றால் என்ன.

குரு—பிரகாணத்தில் பிரதிபாதானம் செய்யப்பட்ட அர்த்தத்திற்கு ஸாதகமாக அங்கு காண்பிக்கப்படும் யுக்தி உபபத்தி எனப்படுகிறது. இதுவும் சாந்தோக்யத்திலேயே மிருத்பிண்ட திருஷ்டாந்தத்தால் நாமரூபாத்மகமான ஸகலமும் விகாரம், அஸத்தியம். பிரமம் ஒன்றுதான் ஸத்யம் என்று ஸ்பஷ்டமாய் வெளியிடப்பட்டிருக்கின்றது.

சிஷ்—முன் கூறப்பட்ட ஸாதனசதுஷ்டயத்தில் மூன்றாவதான சமாதி ஆறுகளில் முதலாவதான சமம் என்பது. அந்தரிந்திரியமான மனதை அடக்குவதாகும். அதற்குச் சிரவணமனன நிதித்யாஸநம் ஸாதனமென்று முன் சொல்லியதில் முதலாவதான சிரவணம் இதுவரை நிரூபிக்கப்பட்டது. இனிஇரண்டாவதான மனனம் என்பது என்ன.

குரு—ஸத்குருவின் உபதேசத்தால் கிரஹிக்கப்பட்ட இரண்டாவதற்ற ஆத்மவஸ்துவை வேதாந்தார்த்தை அனுஸரித்த யுக்திகளைக்கொண்டு எப்பொழுதும் இடைவிடாமல் சிந்திப்பதே மனனமாகும்.

சிஷ்—நிதித்யாஸனம் என்றால் என்ன.

குரு—விஜாதீயமான தேகம் முதல் புத்தி வரையிலுள்ள ஜடபதார்த்தங்களைத் தள்ளிவிட்டு ஸஜாதீயமான அத்விதீயாத்ம வஸ்து விஷயமான ஞானத்தைப் பிரவாகம் போல் ஏகதாரையாகச் செய்வது. நிதித்யாஸனமாகும்.

சிஷ்—ஸமாதிஷட்கத்தில் இரண்டாவதாகக் கூறப்பட்ட தமம் என்பதற்கு என்ன பொருள்.

குரு—வெளியிலிருக்கும் இந்திரியங்களை யடக்குதல் என்று பொருள்.

சிஷ்—எவை எவை வெளி இந்திரியங்கள்.

குரு—கர்ம்மேந்திரியங்கள் 5 ஞானேந்திரியங்கள் 5 இந்தப்பத்துப் புலன்களையடக்குதல் அதாவது சிரவணாதிகளைக் காட்டிலும் வேறு விஷயங்களில் செல்லவிடாமல் தடுப்பதே தமமாகும்.

சிஷ்—உபரதி என்றால் என்ன.

குரு—சாஸ்திரங்களால் நமக்கு அனுஷ்டிக்கும்படி விதிக்கப்பட்ட கர்மாக்களை எந்த மாதிரி விடும்படி சாஸ்திரங்கள் போதிக்கின்றனவோ அவ்விதம் பரித்யாகம் செய்வதே உபரதியாகும்,

சிஷ்—திதிக்ஷை என்றால் என்ன.

குரு—சரீரத்திற்கு அபாயம் நேராமல் சீதோஷ்ணம் முதலானது வந்துவங்களை ஸஹிப்பதும் பிறரால் நமக்குச் செய்யப்படும் அபராதத்திற்குப் பதில் செய்யக்கூடிய சக்தி நமக்கிருப்பினும் பதில் செய்யாமல் ஸஹித்துக்கொண்டிருப்பதும் திதிக்ஷையாகும்.

சிஷ்—ஸமாதானம் என்றால் என்ன.

குரு—சிரவணாதிகளில் நிலைபெற்றிருக்கும் மனமானது முன்னுள்ள வாஸனாபலத்தால் எங்கெங்கு ஸமயங்களில் இதர விஷயங்களில் செல்லுகின்றதோ அவ்வப்பொழுது விஷயங்களிலுள்ள தோஷத்தை உற்றுநோக்கி அவைகளை விட்டு விலக்கி சிரவணாதிகளில் ஸ்திரமாயிருக்கும்படி செய்வதே ஸமாதானமாகும்.

உபபத்திராதிபர்.

(இன்னும் வரும்)

---

# ஸ்ரீ மத் ஜெகத்குரு சங்கர ஜெயந்தி.

ஆர்யர்களே!

நாஸ்திகம் ஓங்கி ஆஸ்திகம் குறைந்தகாலத்தில் ஸ்ரீ கைலாஸ நாதன் அவனிதலத்தில் காலடியில் அவதரித்தது அனைவருமறிந்ததே. இப்பெரியார் செய்த அமாநுஷகாரியத்தை ஆமோதிக்காதவரில்லை. அத்வைதத்தையே மாத்திரமில்லாமல் அவரவர் பரிபாகத்திற்கேற்றபடி ஷண்மதங்களையும் பலஸ்தோத்திர ரத்நங்களையும் அமைத்துளார். ஆத்மஸ்வரூபமும் ஜீவனது நோக்கமும் இன்னதென அறியாது தடுமாடும் ஸமயத்தில் அவதரித்து ஆத்மாவைக்காட்டி ஜீவனது போக்கையும் உபதேசித்தருளினர். தென்தேசத்தில் பிறந்தும் பாரத நாடனைத்தும் சென்று குமதஸ்தர்களை வென்று மதாசாரியாராக மகுடாபிஷேகம் செய்யப்பட்டார். ஸர்வக்ஞபீடத்திலேறி தம் நிஜஸ்வரூபத்தைப் போதித்தார். எக்காலத்தும் தர்மம் தளராதபடி தனது சிஷ்யர்கள் மூலம் பலமடங்களை ஸ்தாபித்து இன்னும் புகழுடலால் ப்ரகாசித்து வருகிறார். நித்யபுருஷரது பிறந்த தினத்தைக் கொண்டாடுவது மூலமாக நித்யப்பொருளான பிரும்மத்தைப்பற்றி சிந்திப்பதாகும்.

வேதாந்த அறிவும் ஆவலுமில்லாதார் இப்பெரியோர் ஜயந்தியில் ஈடுபடுவானேனெனக்கேட்கலாகாது. இல்லறவாழ்க்கைக்கும் ஆசார்ய அருள் அவசியமென அவரது சரிதம் கூறுகிறது. செல்வத்தை வேண்டாதவரெவரேயாவர்? பரம ஏழையின் வீட்டில் ஓர் நல்லிக்கனியைப் புஜித்து கனகதாரை பொழியும்படி செய்தது ஜகதாசாரியரன்றோ? ஆயுளைப் புத்திரபாக்யத்தை விரும்பாதவர் யாவர்? மூகாப்பாள் ஸன்னதியில் இறந்த சிசுவை மடியிலேந்திக் கதரும் தாயைக் கண்டு கருணை நிறைந்த குரு அதை எழுப்பவில்லையா? ராமகிருஷ்ணாதிகளைப்போல் இவர் ஜயந்தியும் எம்மதத்தினராலும் கொண்டாடத் தகுந்ததே.

அன்றியும் கொஞ்சநாள் முன்தோன்றி ஏதோ சில பூதலோக நன்மையைச் சிறிதளவு செய்யும் சிலரைக் கொண்டாடுமிக்காலத்தவர், பரலோக மார்க்கதர்சியான பரமாசாரியர் தினத்தைக் கொண்டாட வேண்டாமோ? தென்னாட்டில் எந்த ஸபையும் எல்

லா க்ராமத்தவரும் சேர்ந்தோ தனித்தனி வீட்டிலோ ஸ்ரீ மதா சாரியாளை அன்று விசேஷமாகப் பூஜிக்கவேண்டும். படத்தையா வது வைத்துக்கொண்டு பூஜை ஊர்வலம் நடத்தி ஸ்ரீ மதாசாரிய சரிதத்தைப் பண்டிதர்களைக் கொண்டு உபன்யஸிக்கும்படி செய்யவேண்டும். பண்டிதரில்லாவிடத்து அவர் சரித நூலையாவது ஒருவர் படிக்க மற்றவர் கேட்கவேண்டும் அப்படிச் செய்வதோடு அதை மற்றைய தினசரி பத்திரிகைகளில் ப்ரசுரிக்க வேணடும். அதனல் ஆஸ்திகர் அதிகமிருக்கின்றனரெனக்கண்டு விதவாவிவாஹாதிஅசாஸ்திரீயச்சட்டங்களை யாரும்கொண்டுவரவும் மாட்டார். ஆதரிக்கவும் மாட்டார். நமக்கும் இஹபர ஸாதகமுண்டு. ஆகலால் நமஸ்கரித்து ஆர்யதர்ம நேயர்களை இத்தொண்டிலீடுபட்டு எனையவரை அநுஷ்டிக்கும்படி செய்ய வேண்டுகிறேன்.

ஸ்ரீவத்ஸ வெ. ஸோமதேவசர்மா.

---

குறிப்பு:—ஸ்ரீ சங்கரகுரு சரிதம் எங்கள் ஸபையால் பிரசுரிக்கப் பட்டது. ($1\frac{1}{2}$) ஒன்றரையணு தலை அநுப்பிப் பெறலாம்.

---

# ஓர் வேண்டுகோள்.

இப்பாத கண்டம் பிராசீன காலம் முதல் சதுர்வித புருஷார்த்தங்களுக்கும் பிறப்பிடம். மந்திரதிருஷ்டாக்களாகிய மஹரிஷிகளிற் அநேகரை ஆஸ்தானமாகக் கொண்டதும் இப்பாதகண்டமென்பதும் ஒப்பமுடிந்ததே. ஸ்வரூபசாக்ஷாத் காரத்தையடைய வேண்டி அமானுஷ்ய சக்தியை யடைந்த மந்திரதிருஷ்டாக்களாகிய மஹரிஷிகளாலேயே வேதவேதாங்கம் பிரபலத் தன்மை யடைந்ததோடுமட்டுமன்றி யாவராலும் அநுஷ்டிக்கப்பட்டும் வந்தது. காலதேசவர்த்தமானத்தின் விபரீதத்தினுற் தற்காலம் வேதவாக்யங்களில் நம்பிக்கையற்றும் நம்பிக்கையுள்ள ஓர் சிலரும் விபரீத தாத்பர்யத்தைக் கைகொண்டு அதன்படி பிரசாரம் செய்ய முன் வந்துவிட்டார்கள். அதனுற் வேதத்தின் கண்ணுள்ள ஆஸ்திக்கியமும் நம்பிக்கையும் குன்றுவதோடு அசாஸ்திரீயமான நடவடிக்கைகள் தலைவிரிகோலமாய்த் தாண்டவமாடுகின்றன. இதற்குப் போதிய சான்ருக சமீபத்தில் நடந்த அகில இந்து மகாஸ

பையின் நடவடிக்கைகளை யாவரும் உணர்ந்திருப்பார்கள். இவ்வளவுக்கும் காரணம், ஸம்ஸ்கிருதக் கல்வியில்லாமையும், அதை ஆதரிப்போர் இல்லாமையுமே. உதாரணமாக ஸப்தவிடங்க க்ஷேத்திரங்களிற் முதன்மைபெற்றதும் சுமார் 24000 பக்த கோடிகளுக்கு மத்தியிற் நடுநாயகமாய் வீற்றிருக்கும் ஸ்ரீ தியாகேச்வர க்ஷேத்திரமாகிய இவ்ஹாடக க்ஷேத்திரத்திற் வேதவேதாந்தங்களைக் கற்கவேண்டுமானால் ஒருவர் கூடக் கிடைப்பது அரிதாகி விட்டது.

ஆகவே இவ்ஹாடக க்ஷேத்திரத்தின் கண் ஓர் வேத காவ்விய வகுப்பு ஏற்படுத்துவது இன்றியமையாததாக யிருக்கிறது. அதன் சார்பில் மாதம் ஒரு முறையாவது பண்டித சிகாமணிகள் மதப்பிரசங்கம் செய்வதும் அத்தியாவசியமாகும். இத்திவ்ய க்ஷேத்திரத்தில் வேத காவ்விய வகுப்பை ஏற்படுத்த என் போன்றவர்களுக்குத் திடவிசுவாஸமும், சங்கற்பமும் யிருந்தும் பொருளில்லாக்குறைவினாற் ஈடேற்ற முடியவில்லை. இதைக் கண்ணுரும் ஆஸ்திகர்களனைவரும் எம்மாதிரியான முறையைக் கைகொண்டால், இப்புனித காரியம் நடைபெறும் என்பதைப்பத்திரிகை வாயிலாகவாவது நேரிலாவது ஆலோசனை கூறும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

தீ. வெங்கட்டராமசாஸ்திரி.

---

॥ श्रीः ॥

॥ श्रीशङ्करो विजयते ॥

# ॥ श्रीमच्छङ्करभगवत्पादाचार्यजन्मदिनोत्सवाऽऽह्वानपत्रिका ॥

राजन्तां जगदानन्दसन्दोहाङ्कुरहेतवः ।
जगदाचार्यवर्याङ्घ्रिसरसीरुहरेणवः ॥
भवे नाम्ना वर्षे क्षितिजगृहं भास्वतीह संप्राप्ते ।
माधवसंज्ञे मासे भार्गवदिवसेऽवदातपञ्चम्याम् ॥

मण्डकोळत्तूरभिधे महति महो बोभवीति संवसथे ।
दशमोऽयं लोकगुरोश्शङ्करभगवत्प्रपूज्यपादस्य ॥
तस्मादिहागत्य विधाय साष्टं प्रणम्य राजं गुरुतल्लजानाम् ।
तदीयकारुण्यरसाभिपूरपरिप्लुताङ्गा भवत द्विजाग्र्याः ॥
प्रगे समर्चनं गुरोः श्रुतिप्रपाठपूर्वकम्
प्रपूजनं द्विजन्मना मथाऽऽतिथेयकर्मणा ।
प्रतोलिकामहोत्सवस्ततो निशीथसङ्क्रमे
महे च देशिकेशितुस्स्युरत्र वाङ्मुखान्यपि ॥

ஶ்ரீ: ।

ஶ்ரீஶங்கரோ விஜயதே ।

ஶ்ரீமச்சங்கரபகவத்பாதாவதாரஜயந்தீமஹோத்ஸவா
ऽऽஹ்வாநபத்ரிகா ॥

ராஜ்ஞாம் ஜகதாந்ந்ருஸோமாங்குரஹேதவ: ।
ஜகதாசார்யவர்யாங்க்ரிஸரஸீருஹரேணவ: ॥

ப்ரபவநாம்நி வர்ஷே க்ஷிதிஜக்ருஹம் பாஸ்வதீஹ ஸம்ப்ராப்தே ।
மாதவஸம்ஜ்ஞே மாஸே ஶுபதிவஸேऽவதாதபஞ்சம்யாம் ॥
மண்டகொளத்தூரபிதே மஹதி மஹோ போபவீதி ஸம்வஸதே ।
தஶமோऽயம் லோககுரோஶ்ஶங்கரபகவத்ப்ரபூஜ்யபாதஸ்ய ॥
தஸ்மாதிஹாகத்ய விதாய ஸாஷ்டம் ப்ரணம்ய ராஜம் குரு
தல்லஜாநாம் ।
ததீயகாருண்யரஸாபிபூரபரிப்லுதாங்கா பவத த்விஜாக்ர்யா:
ப்ரகே ஸமர்சனம் குரோ: ஶ்ருதிப்ரபாடபூர்வகம்
ப்ரபூஜனம் த்விஜன்மனா மதாऽऽதிதேயகர்மணா
ப்ரதோலிகாமஹோத்ஸவஸ்ததோ நிஶீதஸங்க்ரமே
மஹே ச தேஶிகேஶிதுஸ்ஸ்யுரத்ர வாங்முகான்யபி ।

ஆஸ்திகர்காள்! ஸ்ரீகைலாஸவாஸியான பரமேச்வரன் ப்ரஹ்மாதிதேவர்களின் ப்ரார்த்தனானுஸாரியாய் ஸ்ரீசங்கரர் என்னும் திவ்யநாமத்துடன் இப்புண்யபூமியாகிய பாரதகண்டத்தின்கண்

அவதரித்துக்கலியின் ப்ரபாவத்தினுல் அக்காலத்தில் எங்கும் பாவிநின்ற எழுபத்திரண்டு துனமதங்களைக்கண்டித்து, நான்கு வர்ணங்களைச்சார்ந்த ஸமஸ்த ஆஸ்திக சிஷ்யகோடிகளும் உஜ்ஜீவிக்கும்படி வைதிகமான சைவம், வைணவம் முதலிய ஆறு மதங்களையும், முக்யமாக அத்வைத மதத்தையும், ஆஸேது ஹிமாசலம் வரையுள்ள முக்ய க்ஷேத்திரங்களுக்குச் சென்று ஆங்காங்கு ஷை மதத்தைப்பரவச்செய்த விஷயம் யாவரும் அறிந்ததே.

அப்பேற்பட்ட அவதார ச்ரேஷ்டாளாகிய ஆதி சங்கராசார்யாளுடைய பத்தாவது ஜன்மதின மஹோத்ஸவமானது, பாஹா நதிக்கரையிலமைப்பெற்ற மண்டகொளத்தூர் அக்ரஹாரத்தில், ப்ரபவநாம ஸம்வத்ஸரம் சித்திரைமீ 24-௨ வெள்ளிக்கிழமை (6—5—27) வைசாகசுத்தபஞ்சமியன்று காலை ஸ்ரீமதாசார்யபூஜை, வேதம் முதலானபாராயணம், அதிதிஸத்காரம், உசிதகாலங்களில் அரியவித்வான்களின் உபந்யாஸங்கள், இரவு ஸ்ரீமதாசார்ய பிம்பத்திற்கு வீதியில் உத்ஸவம் இவை முதலான வைபவங்களுடன் நடைபெறும். அவ்வமயம் ஆஸ்திக சிஷ்யகோடிகளனைவரும் வந்திருந்து தங்களாலான உதவியைப்புரிந்து பூஜை முதலிய வைபவங்களை தர்சித்து ஸ்ரீமதாசார்யாளுடைய பரிபூர்ண க்ருபைக்குப் பாத்திராளாகும்படி ப்ரார்த்தித்துக் கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

சங்கரநிலயம்,
மண்டகொளத்தூர்.
22—3—27.

இப்படிக்கு,
சிஷ்ய கோடிகள்.

---

குறிப்பு:— இந்நிலயம் கும்பகோணம் மடம் ஸ்ரீமதாசார்யபாதாளுடைய அனுக்ரஹத்தையும் ஆதரவையும் ஸ்ரீமுகத்வாரா பெற்று நடந்துவருகிறது.

---

## கோயம்புத்தூரில் ஆசார்ய விஜயமும் உபன்யாஸமும்.

ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீசங்கராசார்யஸ்வாமிகளவர்கள் 26—4—27 செவ்வாய்க்கிழமை காலை சுமார் $6\frac{1}{2}$ மணிக்கு சூசாரிலிருந்து கோயம்புத்தூருக்கு விஜயம் செய்தார்கள். பட்டணத்தின் பிரவேசித்திற்கு முன்னலேயே பிராமணர்களும் மற்றவர்களும் பூர்ண கும்பவாத்தியங்களுடன் எதிர்

கொண்டழைத்தார்கள். அப்போது அங்கு வந்து கூடியிருந்த பல பெரிய மனிதர்கள் ஜகத்குருவுக்கு அறிமுகம் செய்யப்பட்ட பிறகு ஆசார்யர்களை கர்னூடகப் பல்லக்கில் ஆரோகணிக்கும்படி சிஷ்யகோடிகள் பிரார்த்திக்க அதற்கிணங்கிக் கருணாமூர்த்தியும் பக்தர்களின் மனதைக்குளிரச் செய்துகொண்டு அலங்கரிக்கப்பட்டிருந்த திவ்ய சிபிகையில் ஆரோகணம் செய்து களிக்கச் செய்தனர். பிறகு வேத கோஷங்கள் விண்ணுலகம் தகைக்க வாத்ய கோஷங்களுடனும் தெருத்தாங்காத பக்த ஜனங்கள் சூழ பிரதானவீதிகளின் வழியில் ஆங்காங்கு சித்திரவளைவுகளின் அழகையும் தோரணங்களின் சித்திரத்தையும் பார்த்துக்கொண்டும் கிருகம் தோறும் பக்தியுடன் சுமங்கலிகள் செய்யும் ஆரத்தியையும் தீபாராதனை விமரிசையையும் சந்தோஷத்துடன் கடாக்ஷித்து யாவரையும் பரவசப்படும்படி செய்துகொண்டு சுமார் 12மணிக்கு அலங்கரிக்கப்பட்டிருந்த சிரிங்கேரிமடத்தில் மகாஸ்வாமிகள் விஜயம் செய்தனர். பிறகு ஜனங்களின் ஆரவாரம் அடங்க $\frac{1}{2}$மணி நேரமாயிற்று. அதன் பிறகு தூளி பூஜை நகர ஜனங்களின் க்ஷேமத்திற்காகச் செய்யப்பட்டது. அதன் பின்னர் எல்லோரும் ஒருமனதாய் ஸ்ரீஸன்னிதானத்தின் முக கமலத்திலிருந்து திவ்ய மதுதாரை 2நிமிஷமாவது கிடைக்க வேண்டுமென்று செய்த பிரார்த்தனையை மகாமூர்த்தி ஏற்றுக்கொண்டு ஸம்ஸ்கிருத பாஷையில் வேதத்தில் சிரத்தைவேண்டும். ஈசனை வழிபட வேண்டும். கர்மானுஷ்டானம் கூடியவரை செவ்வனவே செய்யப்படல் வேண்டும் என்பதைப் பற்றி 15 நிமிஷத்தில் யாவருடைய மனதிலும் பச்சைமரத்தில் வைர ஆணியைப் போல் அடித்து விட்டார்கள். ஸம்ஸ்கிருத பாஷையிலேயே திவ்யவாகமிர்தம் பெருகியபோதிலும் பிராமணரல்லாதார் ஸாமான்யர் கூட யாவரும் வெகு சுலபமாய் அறிந்து ஸம்ஸ்கிருதம் கடினமில்லை. அல்லது ஜகத் குருவின் முக கமலத்திலிருந்து யாவருமுய்யுமாறு கிளம்பும் ஸம்ஸ்கிருதம் பராபேக்ஷையின்றிப் பக்ஷபாதமின்றிப் பாமரனையும் குளிரச் செய்யுமென்று பற்பலவாறு ஆனந்தத்துடன் புகழ்ந்தனர். அச்சமயம் நேர்ந்த ஓர் விசேஷத்தை இங்கு கூறுவதுதான் விசேஷம். மகான்களது உபன்யாஸம் முடிவுபெறுவதைப் பார்த்து ஆகா இவ்வைபவம் நமக்கு இனி எங்கு கிடைக்கும். இனித் தனியே இவ்வூருக்கு நான் வந்தால் ஜனங்கள் இதுகாறும் நான் உபேக்ஷையாய் இருந்ததற்குத்திட்டுவார்கள். இச்சமயமே ஜகத்

குருவை அண்டியிறக்குவோம். நமக்கு வசமில்லை. குருசரணங்களை ஒட்டி நம்மைத்துதிப்பார்களென்று எண்ணி மெதுவாய் வருணன் இறங்கினான். இவ்விதம் நேர்ந்ததைப் பார்த்த ஜனங்கள் 6மாத காலமாய் மேகத்தையே காணுதிருந்ததனால் அளவிலாவானந்தமடைந்து ஸ்ரீசரணங்களைப் பணிந்தனர். சற்று நேரத்திற்குப் பிறகு ஆரம்பிக்கப்பட்ட பூஜாவைபவங்களை தரிசித்து 2மணிக்குப் ப்ரசாதம் பெற்றுக்கொண்டு ஜனங்கள் வெளியேறினர். அடுத்த $3\frac{1}{2}$மணி சுமாருக்கு ஆஸ்திகர்கள் ஏராளமாய்க் கூடிவிட்டனர். அதைக்கண்ட ஆசார்யமூர்த்தி கருணையுடன் திவ்ய ஆஸனத்தில் அமர்ந்தனர். உடனே பக்தர்களின் பிரார்த்தனையை ஏற்று ஹரியும் சிவனும் ஒன்றே என்ற விஷயத்தைப் பற்றி திவ்ய அமுதமாரி பொழிய ஆரம்பித்தனர். வந்த பக்தர்கள் உட்கார இடமில்லாவிடினும் மிக நெருக்கமாய் சிரமப்பட்டு நின்றபோதிலும் ஆசார்யமூர்த்தியின் வாக்கமுதத்தின பேராசையால் கொஞ்சமும் சப்தமின்றி மிகவமைதியாய் இருந்தது யாவருக்குமே ஆனந்தமாய் இருந்தது. ஒவ்வொருவரும் மெய்மறந்திருந்ததால் சிரமமென்பதை த்தெரிந்துகொள்ளவேஇல்லை. இவ்விதம் மணி 6 அடித்தாய் விட்டது. அமுதமாரியை ஆசார்யமூர்த்தியே அடக்கிக்கொண்டு ஸந்தியாவந்தனத்திற்குப் பிறகு பாக்கியாகலாமென்று உத்திரவளித்து விட்டது. ஆக்ஞைப்படியே $7\frac{1}{4}$மணிக்கே குழுமி இருந்த ஜனங்களைக் கண்டு பாக்கி விஷயங்களை ஆரம்பித்து 9மணி வரை திவ்யமாரி பொழிந்தனர். வருணன் சற்று ஆரவாரத்தோடு தன் வைபவத்தையும் இடைவிடாது காட்டிக்கொண்டிருந்தும் திவ்ய வாக்கமுதத்தில் மூழ்கி இருந்ததனால் இம்மாரியைப் பொருட்படுத்தவே இல்லை இவ்விதம் நிகழ்ந்த வைபவத்தை நான் என்னென்றுரைப்பது. பட்டிக்காட்டான் ஒருவன் ஹைகோர்ட்டில் போய் உட்கார்ந்தான். அச்சமயம் மகாமேதாவிகளான பாஷ்பமய்யங்காரும் மணிஅய்யரும் வாதிப் பிரதிவாதி தரப்பில் பேசிக்கொண்டிருந்தார்களாம். கோர்ட்டு கலையுமளவும் அதைக் கேட்டுக்காண்டிருந்து பிறகு வெளியே வந்தான். அவனினத்தான் ஒருவன் அவனைப் பார்த்து என்ன அய்யா மிகசந்தோஷப்பரவசர் போல் காணப்படுகிறீர் காரணம் யாதென்றான். அதற்கவன் அப்பா என்னென்று சொல்வேன் ஆனந்தத்தை மணி அய்யர் பேசினார். கோர்ட்டிலுள்ளவர்கள்

அவரது பேச்சால் சித்திரப்பதுமை போல் இருந்தனர். ஜட்ஜியும் ஆனந்தம் அடங்காமல் பேனாவைக்கீழே வைத்துவிட்டு முகத்தில் கையை வைத்துக்கொண்டு அவரைப் பார்த்த வண்ணமாயே இருந்தான். என் ஜன்மத்திற்கு இந்த வைபவத்தைக் கண்ணூர்க் கண்டேன். காதாறக்கேட்டேனென்று ஓயாமற் புகழ்ந்தான் அதைக்கேட்ட மற்றவன் ஐயா என்ன விஷயம் பேசினார் அவ்விஷயத்தை எனக்குக் கொஞ்சம் சொல் நானும் அவ்வானந்தத்தை அநுபவிக்கலாகாதோ என்றான். என் சொல்வான் பட்டிக்காட்டான். அப்பா என்ன சொல்வேன் எனக்கு ஆங்கிலமே தெரியாது. ஆயினும் பேசின அழகை நேரில் அநுபவித்தால்தான் தெரியுமென்றான். இத்தன்மை போல் இம்மகான் வாக்கின் ஸாரத்தை எவ்விதம் கூறமுடியும். கேட்ட யாவரும் பரவசமாய் ஆனந்தமடைந்தார்கள். யானுமவ்விதமானேனென்று தான் சொல்லுவேன். ஒரு சமயம் கொஞ்சம் கொஞ்சம் எனது நெஞ்சுக் குழியில் தங்கினதை வெளி விடுவோமென்றால் சாப்பிட்டது பஞ்சபக்ஷ்யமாயினும் திரும்பி வெளியேறினால் வாந்தி என்பார்களாயினும் அவ்விதத் தாழ்ந்த உவமை இங்கு சற்றும் பொருந்தாது. இவ்வாகமுகத்தை வாயால் பானம் செய்வதில்லை. காதாற் பானம் செய்வோம். இது வெளியேறுவது வாக்காலேயாயினும் முற்றிலும் ஆபாஸமாய் விடாது. வைசம்பாயனரிடமிருந்து கற்றுக் கொண்ட வேதத்தை திவ்ய தேஜோமயமாகவே ஓர் காரணம் பற்றி யாக்ஞவல்கியர் கக்கினாரென்றும் அதை வைசம்பாயனரது சிஷ்யர்கள் தித்திரி பக்ஷியாய் கிரஹித்தார்கள் என்றும் கதை இருக்கிறது. ஆகவே ஏதோ அற்பமேனும் சொன்னால்தான் என் மனம் சந்தோஷமடையுமென்று ஒரு பாகத்தின் ஓர் மூலையைத் தாறுமாறாகவாவது கூறுகின்றேன். ஹரிஹர பேதம் கிடையாதென்பதற்கு மகான் உபதேசித்தது இது ஈசன் ஒருவனே. அவன் கர்மவசத்தால் மாறுதலடைகிறான். அதனால் உண்மையில் அது அவனது ரூபமல்ல. எது போலெனில் ஒரு மனிதன் தாசில்தாராக இருக்கிறான். அப்போது அவன் தாசில்தார் என்று வ்யவகரிக்கப் பெற்று அத்தொழிலைச் செய்கிறான். அவனே வீட்டுக்கு வந்து மாமாவென்றும் அப்பாவென்றும் அழைக்கப்பெற்று அதற்கேற்ற தொழிலையே செய்வான், ஒரு சமயம் கொல்லையில் மண்வெட்டியை எடுத்துக்கொண்டு அதற்கேற்ற ஆடையுடன் கடோர ரூபமாய் நிற்பான். அதனாலவனுக்கென்ன

அதுபோல் சிருஷ்டி கார்யத்தில் ஈசன் ரஜோகுணத்தைப் பெற்று பிர்மாவென்றழைக்கப் படுகிறான். ஸத்வகுணத்தை அவலம்பித்து ரக்ஷண கன்மாவை ஏற்கும்போது அவனே விஷ்ணுவென்று துதிக்கப்பெறுகிறான். தமோ குணத்தைக் கைப்பிடித்து ஸம்ஹாரத் தொழிலுக்காக ருத்திரனெனப் பெயர் பெறுகிறான். இதனால் ஈசனுக்குக் குறையென்ன. இதில் மூர்த்திபேதமே கிடையாதென்பதை சாமான்யமாய்க் காளிதாஸனும்:—

एकैव मूर्तिर्बिभिदे त्रिधा सा सामान्यमेषां प्रथमावरत्वम् ।
विष्णोर्हरस्तस्य हरिः कदाचिद्वेधास्तयोस्तावपि धातुराद्यौ ॥

ஏகைவ மூர்த்திர்பிபிதே த்ரிதா ஸா ஸாமாந்யமேஷாம் ப்ரதமாவரத்வம் । விஷ்ணோர்ஹரஸ்தஸ்ய ஹரி: கதாசித்வேதாஸ்தயோஸ்தாவபி தாதுராத்யௌ ॥

என்பதால் கூறுகிறான். ஆனால் இவ்விதமூர்த்திபேதமில்லாமல் யாவரும் நம்முன்னோர்கள் உபாஸித்ததாய் தெரியவில்லையே. ஏதோ ஓர் மூர்த்தியையே விசேஷமாய் ஆராதித்திருக்கிறார்களே யென்றால் அதுதான் நியாயம் ஆனால் அவன் பெரியவன் இவன் சிறியவனென்ற பேதம்மட்டிலும் அங்குதோன்றுதல் கூடாது. அவ்விதம் தோன்றினால் அவன்பாபி. ஆகல்பற்றியே ஓர்மகான்

महेश्वरे वा जगतामधीश्वरे जनार्दने वा जगदन्तरात्मनि ॥
न वस्तुभेदप्रतिपत्तिरस्ति मे तथापि भक्तिस्तरुणेन्दुशेखरे ।

மஹேஶ்வரே வா ஜகதாமதீஶ்வரே ஜநார்தநே வா ஜகதந்தராத்மநி । ந வஸ்துபேதப்ரதிபத்திரஸ்தி மே ததாபி பக்திஸ்தருணேந்துஶேகரே । என்னும். மற்றுமொருவர்.

शैवा वयं न खलु तत्र विचारशङ्का
पञ्चाक्षरीजपपराः खलु सर्वदैव ।
चेतो मदीयमतसीकुसुमावभासं
स्मेराननं स्मरति गोपवधूकिशोरम् ॥

ஶைவா வயம் ந கலு தத்ர விசாரஶங்கா
பஞ்சாக்ஷரீஜபபரா: கலு ஸர்வதைவ ।

[illegible]

[illegible] ॥

என்றுவஸ்துவினிடத்தில் பேதபுத்தி இல்லாமலே மூர்மூர்த்தியை அவலம்பிக்கவேண்டும் என்கிறார். ஆனால் இங்கு ஒரு தீராத சங்கை யேற்படலாம். விஷ்ணுவின் குணகணங்களைப் படிக்க ஆனந்தமாய் இருக்கிறது அவரது மூர்த்திவைபவத்தைக்கேட்க ரம்யமாய் இருக்கிறது. அவர் ரக்ஷணமூர்த்தி பீதாம்பரதாரீ வனமாலீ லக்ஷ்மீஸமேதன் புன்சிரிப்புள்ளவன் சங்கசக்கிரதாரிஸத்வ குணம் நிறைந்தவன். ருத்ரனோ சம்ஹாரமூர்த்தி பயங்கரமான சூலமும் மழுவுமேந்தியவன் நெற்றிக்கண்ணுடையவன். ஒரு சமயம் திகம்பரன் மறுசமயம் யானைத்தோலையோ புலித்தோலையோ உடுத்தியவன் ஆபரணமோ பாம்பும் எலும்புகளுமே பூச்சோ சுடுகாட்டுச்சாம்பல் தலையிலோகோரமானசெஞ்சடை இம்மூர்த்தியை தியானம்செய்வதெப்படி. இவரை வழிபடுவதெப்படி, இவரது அனுக்கிரகம் கிடைத்தால் சம்ஹாரம்தானே. மூர்த்திபேதமில்லையாயினும் இம்மூர்த்தியை வழிபடல் வேண்டாம். விஷ்ணுவையே அண்டுவோமென்றால் அவ்விதமல்ல இங்கு ஊன்றி கவனிக்கவேண்டும். இங்குதத்துவத்தை நன்கு ஆழ்ந்துபார்ப்பீர்களானால் மும்மூர்த்தியோடு நிற்காது இன்னுமொரு மூர்த்தி உண்டென்றும் அதைத்துரீய மூர்த்தியென்றும் அவன்தான் அதிகாரனென்றும் அவன் முத்தொழில்களை உத்தேசித்து மூவுருப்பெறுகிறானென்றும் அத்துரீயமூர்த்திக்கும் ருத்திரமூர்த்திக்கும் தான் நெருங்கிய சம்பந்தமுண்டென்றும் இவரது குணம் மெச்சத்தக்கதாய் ஆகுமென்றால், தோன்றும் எவ்விதமெனின் கவனியுங்கள். இங்கு ஸம்ஹாரமென்றால் தலையில் தடியாலோ உலக்கையாலோ அடித்துக்கொன்றுவிடுகிறதென்பதில்லை. ஸம்ஹாரமென்றால் கொல்லுதல் என்றாலும் சுருக்குதல்என்ற அர்த்தத்தைக் கொடுக்கிறது. ஆகவேசுருக்குகிறார் எதைச்சுருக்குகிறார். யார் விஸ்தரித்தானோ அவனே சுருக்குவான் யார் எதை விரித்தான்பிரபஞ்சாகாரமாய் சிருஷ்ட்டியென்றும் ஸ்திதியென்றும் விரித்தான் பிறகு அவைகளின் சிரமபரிகாரத்திற்காக தன்னுள் அவைகளை சுருக்கிக்கொள்கிறான் பாருங்கள்நம்முள் பிரதிதினமும் இம்முத்தொழிலுமிருக்கிறது. அதை ஜாக்கிரம் ஸ்வப்னம் ஸுஷுப்திஎன்போம் இதில் ஸ்வப்பனத்திற்குச் சமானம் சிருஷ்டி

ஸ்வப்னத்தில் நாம் எவ்வளவோ ஸ்ருஷ்டி செய்துவிடுகிறோம். ஜாக்கிரம் என்பதுதான் ரக்ஷணம் இவ்விரண்டு தொழிலும் சுகமும் துக்கமும் கலந்தே இருக்கிறது. சுஷுப்தி என்பதில்தான் இந்திரியங்கள் யாவும் ஒடுங்கிவிடுகிறது. அதைத்தான் துக்க ஸம்பந்தமே இல்லாமல் நிகரற்ற சுகமாய் அனுபவிக்கிறோம். எதனால் எல்லாம் ஒடுங்குவதால்தான். அதுபோல் ஸம்ஹாரமூர்த்தியினிடத்தில் தான் நாம் ஒப்பற்ற சுகமடைவோம். அது ஒடுங்கும் சுகம். அதை எம்மூர்த்தியினிடத்திலடைகிறோம். ஆனால் அஸ்திமாலையும் சாம்பலும் எதற்கென்பீர்கள். அவர் வசிப்பது முதுகாடு ஏன் முதுகாட்டில் வசிக்கவேண்டும் என்பீர்களோ இல்லை இதுதான் இவர் துரீயமூர்த்தியென்பதை வற்புறுத்துகிறது. துரீயமூர்த்தி அழிவற்றவர். அதுபோல் மகாப்ரளயத்தில் எல்லாப் பிரபஞ்சமும் தன்னுள் ஒடுங்கின பிறகு ஒன்றுமில்லாததால் முதுகாடென்றது. அங்கு அவர் ஒருவரே. இன்னும் துரீயமூர்த்தி என்பது சுத்த ஸத்வகுணம் பொருந்தியது. இம்மூர்த்தியும் அத்தன்மை பொருந்தியதே ஆனால் தமோகுணத்தால் ஸம்ஹாரமூர்த்தியென்றோமே எனில் அதல்ல வெளித்தோற்றத்திற்காக அது ஏற்பட்டது. விஷ்ணுமூர்த்தி என்பது வெளித்தோற்றத்தில் ஸத்வகுணமுள்ளது ஆதல்பற்றியே

अन्तस्सत्वगुणश्शिवः बहिस्सत्वगुणो हरिः ।

அந்தஸ்ஸத்வகுணஶ்ஶிவ: பஹிஸ்ஸத்வகுணோ ஹரி: ।

என்றே சொல்லுவதுண்டு. பிர்ம்ஹாவென்பவர் உள்ளும் புறமும் ரஜோகுணமுடையவர் ரஜோகுணம் தள்ளத்தக்கதால்தான் அவரை உபாஸிக்காமலே விட்டுவிட்டோம். மற்றுருத்திரனுக்கு ஸாமான்யமாய் யாவருமறியத்தக்க ஈசன் சிவன் என்றெல்லாம் நாமங்கள் உள. ஈசனென்றால் அதிகாரி மகேசன் மகாராஜா என்றாகிறது. சிவனென்றால்

स्वश्रेयसं शिवं भद्रं कल्याणं मङ्गलं शुभम् ।

ஶ்வஶ்ரேயஸம் ஶிவம் பத்ரம் கல்யாணம் மங்கலம் ஶுபம் ।

என்று மங்களரூபன் கலயாணரூபன் சுபரூபன் என்றாகிறது. ஆகவே சிவம் வேண்டாம் என்றால் என்ன நேரும் அவ்விதம் ஒருவரும் சொல்லமாட்டார். மற்றும் ஸத்வகுணம் நிறைந்தவராதல்பற்றியே அதற்கனுகுணமாய் அவரும் வெளுப்பு, பிரபஞ்

சமெல்லாம் கடைசியில் இத்தன்மைக்காகும் இதை நம்பாதே என்பதைக்காட்டி இச்சடலமும் இதுதான் என்பதற்காக தேகத்தில் பூசிய திருநீறும் வெளுப்பு தலையிலுள்ள கெங்கையும் வெளுப்பு. சந்திரனும் வெளுப்பு. ஏறிய இடபமும் வெள்ளை நின்றமலையும் வெள்ளி பிராகாரங்களும் கோபுரங்களும் நிறைந்துள்ள ஓர் பெரிய கோவிலில் நுழைந்தால் ஆங்காங்கு பரிவார தேவதைகளின் ஸன்னிதி விசேஷ ஆடம்பரத்துடனிருந்த போதிலும் தேடித்தேடி உட்சென்றால் நடுமத்தியில் திவ்யமூர்த்தி பிரகாசிப்பதுபோல் வேதமெனும் கோயிலுட்பிரவேசித்தால் ஆங்காங்கு ஒவ்வொரு தேவதையையும் நீயே பிர்ம்ஹமென்று துதித்திடினும் வேதத்தின் பரமமத்தியில் கர்ப்பகிருகத்திற்போல் சிவ- என்ற 2 அக்ஷரம் அழகாய்ப் பிரகாசிக்கிறது. ஆகவே கோவில் விஷ்ணு கோவில் சிவன்கோவில் என்று பிரதான தேவதையைக் கொண்டு சொல்வது போல் வேதமும் சிவனைத்தான் சொல்கிறதென்று சொல்ல யாதுதடை. அதுபோல் ராமாயணம் பாரதம் பாகவதம் முதலிய கிரந்தங்களும் வெளிப்படையாய் வேறொன்றைச் சொன்னபோதிலும் வியங்கிய மரியாதையால் சிவனையே கூறுகின்றது. ஆகவே சிவன் ஒருவன்தான் தியானம் செய்யத் தக்கவன் என்று உபநிடதங்களும் கதறுகின்றன. ஆகவே நிஷ்களங்க துரீயமூர்த்தியே இவர் என்று சந்தேகமறக் கூறலாம்.

गिरामाहुर्देवीं द्रुहिणगृहिणीमागमविदो
हरेः पत्नीं पद्मां हरसहचरीमद्रितनयाम् ।
तुरीया कापि त्वं दुरधिगमनिस्सीममहिमा
महामाया विश्वं भ्रमयसि परब्रह्ममहिषी ॥

கிராமாஹுர்தேவீம் த்ருஹிணக்ருஹிணீமாகமவிதோ
ஹரே: பத்நீம் பத்மாம் ஹரஸஹசரீமத்ரிதநயாம் ।
துரீயா காபி த்வம் துரதிகமநிஸ்ஸீமமஹிமா
மஹாமாயா விஶ்வம் ப்ரமயஸி பரப்ரஹ்மமஹிஷீ ॥

M. N. சுப்பிரமண்ய சாஸ்திரி

(இன்னும் வரும்)